# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## அவசரகால பொதுச் சுகாதாரம்

**அவசரகால பொதுச் சுகாதார நிலைமை ஒன்றைப் பிரகடனப்படுத்தல்; பொதுமக்கள் சுகாதாரம் தொடர்பாக அவதானம் செலுத்துவதற்கான விசேட செயன்முறைகளை அங்கீகரித்தல்; மற்றும் அதற்கு இடைநேர்விளைவான விடயங்களை வழங்குதல் தொடர்பானதொரு சட்டமூலம்**

---

*யாழ்ப்பாணம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம். ஏ. சுமந்திரன் அவர்களால் 2021, ஏப்பிறல் மாதம் 23 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2021, ஏப்பிறல் மாதம் 15 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***47 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *28.00***  **தபாற் செலவு : ரூபா *15.00***

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அவசரகால பொதுச் சுகாதார நிலைமை ஒன்றைப் பிரகடனப்படுத்தல்; பொதுமக்கள் சுகாதாரம் தொடர்பாக அவதானம் செலுத்துவதற்கான விசேட செயன்முறைகளை அங்கீகரித்தல்; மற்றும் அதற்கு இடைநேர்விளைவான விடயங்களை வழங்குதல் தொடர்பானதொரு சட்டம்

*முன்னுரை*

கோவிட் 19 பெருந்தொற்று முழு உலகையும் ஆட்கொண்டுள்ள ஒரு நிலைமையில் ; மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வேறெந்த வகையான பெருந்தொற்று ஒன்றை எதிர்த்துப் போராடுவதற்கு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய ஒரு நிலைமையில்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

***1.*** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, அவசரகால பொதுச் சுகாதார சட்டம் எனக் குறிப்பிடப்பட முடியும் என்பதுடன் அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரைக்கு அமைய அத்தாட்சிப் படுத்தப்படும் திகதியில் இருந்து செயல்வலுப் பெறும்.

### I ஆம் பகுதி

### பொது

*அவசரகால பொதுச் சுகாதார நிலைமை யொன்றைப் பிரகடனப் படுத்தல்*

***2.*** அவசரகால பொதுச் சுகாதார நிலைமை ஒன்றினை அல்லது அதற்கு அண்மித்துள்ள நிலைமையினைக் கருத்திற் கொண்டு பொதுச் சுகாதார தேவைப்பாடுகள் மற்றும் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் எழுத்துமூல அறிவுறுத்தலுக்கு அமைய அதனை நிறைவேற்றுதல் பொருத்தமானதென பாராளுமன்றம் கருதும்பட்சத்தில், குறித்த பிரேரணைக்கு ஒட்டுமொத்த பாராளுமன்ற உறுப்பினர்களுள் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களுக்குக் குறையாத எண்ணிக்கையினர் (சமுகம் தராத உறுப்பினர்கள் உள்ளடங்கலாக) அதற்கு சார்பாக வாக்களித்தல், அவசரகால பொதுச் சுகாதார நிலைமையொன்று உருவாகியுள்ளதென பிரகடனப்படுத்தல் இச்சட்டத்தின் II ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உடனடியாக அல்லது யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் இலங்கை முழுவதும் அல்லது இலங்கையின் ஏதேனும் ஒரு பகுதியில் அல்லது பகுதிகளில் விசேடமாக காட்டப்பட்டுள்ளவாறு அமுல்படுத்தப்படும்.

**3.** (1) வேறெந்த சட்டத்திற்கும் முரணாக, பாராளுமன்றம், அமைச்சரவை, நீதிமன்றங்கள், அவசரகால பொதுச் சுகாதார சபை ஆகியன தற்போது முதல் வழங்கியுள்ளவாறு ஏனைய எந்தவொரு நிறுவனம்/ நிறுவனங்களுக்கு அவசரகால சுகாதார நிலைமையொன்றின் கீழ் சமகால அல்லது அதற்கு அண்மித்த சமகால செவிப்புல மற்றும் கட்புல தொடர்பினைப் பயன்படுத்தி கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளை நடாத்த முடியும். தொலைக் கூட்டம்

(2) சமகால அல்லது அதற்கு அண்மித்த சமகால செவிப்புல மற்றும் கட்புல தொடர்புக்குத் தேவையான அனைத்து தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிதிசார் வளங்கள் ஏற்புடைய நிறுவனத்திற்கு /நிறுவனங்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

(3) முதலாவது உபபிரிவின் பிரகாரம் நடாத்தப்படும் அவ்வாறான கூட்டங்களின் அனைத்துக் குறிப்புக்களும் பதிவு செய்யப்பட்டு இலத்திரனியல் வடிவில் சேமிக்கப்பட்டு பின்னர் கூட்டங்களுக்கு ஏற்புடைய பொதுவான சட்டவிதிகளுக்கு அமைவாக பிரதி செய்யப்படல் வேண்டும்.

**4.** (1) வேறு எந்தவொரு சட்டத்திற்கும் முரணாக, அவசரகால பொதுச் சுகாதார காலப்பிரிவினுள் மற்றும் சாதாரண நிலைமையாக காணப்பட்ட போதும், எந்தவொரு நபருக்கும் அடையாள ஆவணங்களை வழங்குதல் அல்லது புதுப்பித்தல் உள்ளிட்ட பிறப்பு, இறப்பு அல்லது விவாகச் சான்றிதழ், வரவின்மைச் சான்றிதழ் வழங்குதல் மற்றும் தொலை இலத்திரனியல் மூலம் அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல் அல்லது புதுப்பித்தல் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக நேரில் சமுகமளிப்பதற்கு அவசியமற்ற எந்தவொரு அரசாங்க சேவைக்கும் பிரவேசிக்க முடியும். தொலைச் சேவைகள்

(2) அவ்வாறான தொலை இலத்திரனியல் பிரவேசத்திற்குத் தேவையான அனைத்து விதமான தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிதிசார் வளங்கள் (1) ஆம் உபபிரிவில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள அரசாங்க சேவையொன்றை வழங்கும் ஏற்புடைய நிறுவனம்/நிறுவனங்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

## II ஆம் பகுதி

### அவசரகால பொதுச் சுகாதார நிலைமை

**5**. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள எந்தவொரு பிரேரணையின் மூலமாகவும் அவரகால பொதுச் சுகாதார நிலைமையொன்றுக்கு அடிப்படைக் காரணமாக அமையும் தொற்று நோய் பற்றி நிச்சயிக்கப்படும் : *தொற்று நோய்களை நிர்ணயித்தல்*

ஆயின், 2 ஆம் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணையின் கீழ் தொற்றுநோய் ஒன்று தவறுதலாக இனம் காணப்பட்டிருப்பின், இப்பிரேரணைக்கு அமைவாக இச்சட்டத்தின் II ஆம் பகுதியின்கீழ் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு பாராளுமன்றத்தால் குறித்த அப்பிரேரணை திருத்தப்பட முடியும்.

**6**. (1) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் அவசரகால பொதுச் சுகாதார நிலைமையொன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பமொன்றில், அவசரகால பொதுச் சுகாதார சபை எனும் நிறுவனம் ஒன்று (இதனகத்துப்பின்னர் "சபை" என அழைக்கப் படும்) தாபிக்கப்படல் வேண்டும். *அவசரகால பொதுச் சுகாதாரச் சபை*

(2) அத்தகைய சபை பின்வரும் நபர்களைக் கொண்டிருக்கும்:-

(அ) சபையின் தலைவரான சனாதிபதி;

(ஆ) சபையின் உபதலைவரான பிரதமர்;

(இ) எதிர்கட்சித் தலைவர்;

(ஈ) பின்வரும் விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்கள்:-

(i) சுகாதாரம்;

(ii) சமூக நலன்புரி;

(iii) சுற்றாடல்;

(iv) உள்நாட்டலுவல்கள்;

(v) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்;

(vi) பாதுகாப்பு;

(vii) பொலிஸ்;

(viii) நிதி;

(ix) வெளிநாட்டலுவல்கள்;

(x) கல்வி; மற்றும்

(xi) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அவசரகால பொதுச் சுகாதார நிலைமை தொடர்பில் பாராளுமன்றத்தால் இயைபுடையது எனக் கருப்படும் விடயங்களுக்குப் பொறுப்பான ஏனைய அமைச்சர்கள்.

(உ) சுகாதார சேவைப் பணிப்பாள் நாயகம்;

(ஊ) (3) ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள்.

(3) சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவருடன் கலந்துரையாடி ஐந்து எதிர்க்கட்சிப் பாராளுமன்ற அங்கத்தவர்களை சபையின் உறுப்பினர்களாக பெயரிடுதல் வேண்டும்.

(4) தேசிய திட்டமிடல் மற்றும் வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்தல் சபையின் பணிகளாக அமையும்.

(i) இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள தொற்று நோய்களை இனம்காணல் மற்றும் அதற்கு முகம் கொடுப்பதற்காக வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல்;

(ii) இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் குறிப்பிட்டுக் காட்டப் பட்டுள்ள தொற்று நோய்களில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கு மக்களுக்கு உதவுவதற்காக மக்களை அறவூட்டுதல் மற்றும் பயிற்சியினை அபிவிருத்தி செய்தல்;

(iii) இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்டுக் காட்டப் பட்டுள்ள பண்டங்கள் மற்றும் சேவைகளைத் தொடர்ச்சி யாக வழங்குதல் ;

(iv) ஆதரவற்ற நிலையில் பண்டங்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நபர்களுக்கு இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் ;

(v) இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்கீழ் குறிப்பிட்டுக் காட்டப் பட்டுள்ள தொற்று நோய்களைத் தடுப்பதற்குத் தேவையான ஏனைய அனைத்து செயற்பாடுகளும் யாவை என்பது பற்றி சபையினால் அவ்வாறான நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட முடியும்.

(5) (4) ஆம் உபபிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட தேசிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து தொழில்நுட்ப, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிதி வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கு சபையினால் பாராளுமன்றத்துக்கு பரிந்துரை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்;

(6) சபையினால் அதனது கூட்டங்கள் நடாத்தப்படல் மற்றும் அவ்வாறான கூட்டங்களின் போது வணிகக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளல் தொடர்பான நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான சட்டவிதிகள் வகுக்கப்பட முடியும்.

(7) சபையின் எந்தவொரு கூட்டம் தொடர்பாகவும் கூட்ட நடப்பெண் சபையின் மொத்த அங்கத்தவர்களுள் மூன்றில் ஒன்றாக அமைதல் வேண்டும்.

*அவசரகால பொதுச் சுகாதார கால எல்லை*

**7**. இச்சட்டத்தின் II ஆம் பகுதியின் ஏற்பாடுகள் 2 ஆம் பிரிவின் பிரேரணை ஒன்றின் மூலம் எந்தவொரு திகதியிலும் நடைமுறையில் உள்ள ஒரு சந்தர்ப்பத்தில், அவ்வாறான ஏற்பாடுகள் அத்திகதியில் இருந்து அறுபது தினங்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் அவ்வாறின்றி அதற்கு முன்னர் பிரேரணையை மீளப்பெறுவதற்கு அல்லது அக்கால எல்லை முடிவடைவதற்கு முன்னர் மற்றுமொரு பிரேரணையை அங்கீகரித்தல்.

**அவசரகால பொதுச் சுகாதார நிலைமையை முடிவுறுத்தல்**

**8**. அவசரகால பொதுச் சுகாதார நிலைமை ஒன்று முடிவுக்கு வரும் சந்தர்ப்பம் ஒன்றில், அவசரகால பொதுச் சுகாதார நிலைமையில் அல்லது அதன் பிரகாரம் வெளியிடப்பட்ட சட்டத்தில் இப்பகுதியின் கீழ் உள்ள எந்தவொரு கட்டளை, வழிகாட்டல் அல்லது தீர்மானம் அக்கால எல்லை முடிவடைந்த பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் செயல்வலுப் பெறும்.

**அடிப்படை உரிமைகளை தற்காலிகமாக மட்டுப்படுத்தல்**

**9**. (1) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டளையின் பிரகாரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் எழுத்து மூல அறிவுறுத்தலுக்கு அமைய அமைச்சருக்கு 14 தினங்களுக்கு மேற்படாத காலத்திற்காக குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளவாறு தடை செய்வதற்கு அல்லது வரையறுப்பதற்கு முடியும். அவ்வாறான ஒரு கட்டளை:-

(அ) பொதுமக்கள் கூட்டங்கள்;

(ஆ) மத வழிபாடுகள், அனுட்டானங்கள், பின்பற்றல்கள் மற்றும் பகிரங்க கற்பித்தல்;

(இ) இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவில் குறிப்பிட்டுக் காட்டப்படாத தொழில் ஒன்றில் ஈடுபடல்;

(ஈ) வாழ்விடங்கள் மற்றும் அவற்றுக்கு வெளியில் பயணித்தல்;

(உ) எந்தவொரு பொது வீதி, புகையிரத வீதி, பொதுப் பூங்கா, பொதுப் பொழுதுபோக்கு மைதானம், கடற்கரை அல்லது உணவகம், ஹோட்டல், பொதுப் போழுதுபோக்கு இடம் ஒன்றில் அல்லது ஏனைய எந்தவொரு பொது இடத்தில் இருத்தல்.

அவ்வாறான ஒரு கட்டளையின் மூலம் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள வாறு பெயர் குறிபிடப்பட்டுள்ள நபர் ஒருவர் அல்லது அதிகாரி ஒருவரால் வழங்கப்படும் எழுத்துமூல அனுமதிப் பத்திரம் தவிர்ந்த.

(2) முதலாவது உபபிரிவின்கீழ் வழங்கப்படும் எந்தவொரு கட்டளையும் உடனடியாக பாராளுமன்றத்துக்கு அறிவிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அப்பிரேரணை மூலம் அவ்வாறான கட்டளையினை நீக்குவதற்கு முடியும்.

(3) பிரேரணை மூலம் பாராளுமன்றத்தால் (1) ஆம் உபபிரிவின் கீழ் வழங்கப்பட்ட கட்டளை ஒன்றை மேலும் 14 தினங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கு நீடிக்க முடியும் என்பதுடன் அதற்குச் சமமான பிரேரணை ஒன்றின் பின்னர் அக்கட்டளையினை 14 தினங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்கு நீடிக்க முடியும்.

(4) நியாயமானதொரு காரணம் இன்றி (1) ஆம் உபபிரிவின்கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டளையின் பிரகாரம் செயற்படத் தவறும் எந்தவொரு நபரும் குற்றம் புரிந்தவராகக் கருதப்படுவதுடன், அந்நபர் இச்சட்டத்தின் 13(1) (அ) பிரிவிற்கு அமைய தனிமைப்படுத்தலில் ஈடுபடுத்தப்படுவதற்கு கட்டுப் பட்டுள்ளார்.

(5) இப்பிரிவின்கீழ் குற்றம் புரியும் ஒவ்வொரு நபரும் நீதிவான் முன்னிலையில் இடம்பெறும் சுருக்கமுறை வழக்கு விசாரணை ஒன்றின் பின்னர் குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் ரூபா ஒன்பதா யிரத்திற்கு மேற்படாத அபராதம் செலுத்துவதற்கு உட்படுவார்.

அத்தியாவசிய சேவைகள்

**10.** (1) இது தொடர்பாக சட்டரீதியிலான தொழில் ஒன்றில் ஈடுபடும் எந்தவொரு நபரும்:-

(அ) சுகாதார பராமரிப்பு;

(ஆ) நீர், மின்சாரம் அல்லது துப்பரவேற்பாடுகள் உள்ளிட்ட பொதுப் பயன்பாட்டு சேவைகளை வழங்குதல்;

(இ) மருந்து உற்பத்தி, போக்குவரத்து மற்றும் விநியோகம், சுகாதார பராமரிப்புச் சேவைத் தொழில்நுட்பம் மற்றும் மருத்துவ சத்திரசிகிச்சை உபகரணங்கள்;

(ஈ) விவசாய மற்றும் உணவுப்பொருள் உற்பத்தி, போக்குவரத்து மற்றும் விநியோகம்;

(உ) சட்ட அமுலாக்கம் மற்றும் பாதுகாப்பு;

(ஊ) அவசரகால பொதுச் சுகாதார நிலைமையினை எதிர் கொள்வதற்காக நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து செயற்பாடுகள்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் கருத்திற்கொள்ளப்படாது இவ்வாறான சட்டரீதியான தொழில் ஒன்றில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப் படும்.

(2) இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள சபையினால் (1) ஆம் உப பிரிவில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள பொருட்கள் அல்லது சேவைகள் வழங்கும் தொழில்முயற்சியில் ஈடுபட்டுள்ள ஏதேனும் நிறுவனம் ஒன்றை நடாத்திச்செல்லல் அல்லது பொறுப்பேற்பதற்கு நிதிசார் வளங்களைப் பெற்றுத் தருமாறு பாராளுமன்றத்திற்கு பரிந்துரை செய்யமுடியும்.

சுகாதாரப் பிரிவு

**11.** (1) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைகள் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் எழுத்துமூல அறிவுறுத்தலுக்கு அமைய அமைச்சருக்கு அத்தகைய கட்டளையில் காட்டப்பட்டுள்ளவாறு பின்வரும் பணிகளை மேற்கொள்ள முடியும்:-

(அ) ஆட்களை தனிமைப்படுத்துவதற்கு பொருத்தமான நிறுவனங்களை பராமரித்தல் அல்லது நிர்மாணித்தல்;

(ஆ) ஆட்களுக்கு சுகாதார சேவைகளை வழங்கும் நோக்கில் அல்லது ஆட்களை அல்லது ஏனையவற்றை தனிமைப் படுத்துவதற்குப் பொருத்தமான ஒரு நிறுவனமாக பயன்படுத்துவதற்காக இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள வாழ்விடங்கள் அல்லது சட்டரீதியான தொழில் ஒன்றுக்காகப் பயன்படுத்தப்படும் வளாகங்கள் தவிர்ந்த எந்தவொரு இடத்தினையும் கோருவதற்கு;

(இ) ஆட்களுக்கு சுகாதார பராமரிப்புச் சேவைகளை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் தனியார் வைத்தியசாலை ஒன்று அல்லது ஏனைய ஒரு இடத்தினை கோருவதற்கு;

(ஈ) ஆட்களுக்கு சுகாதார பராமரிப்புச் சேவைகளை வழங்கு வதற்காகப் பயன்படுத்தப்படும் வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய இடங்களில் சேவையில் ஈடுபடுத்துவதற்கு தற்காலிக ஊழியர்களை ஆட்சேர்த்தல்;

ஆயின், அவ்வாறான கோரிக்கை ஒன்று அல்லது தற்காலிக ஆட்சேர்ப்பு ஒன்று, அத்தகைய கட்டளையில் காட்டப்பட்டுள்ள கால எல்லைக்காக மாத்திரம் செயல்வலுப் பெற வேண்டும் என்பதுடன் அத்தகைய கால எல்லை அவசரகால பொதுச் சுகாதார காலப்பிரிவுக்கு அப்பால் நீடிக்கப்படல் ஆகாது.

(2) (1) (இ) பிரிவின்கீழ் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கை ஒன்றின் நேரடி விளைவின் காரணமாக நட்டம் அனுபவிக்கும் எந்தவொரு நபருக்கும் அவரது வளாகத்தை அத்தகைய கோரிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட முன்னர் காணப்பட்ட நிலைக்கு அல்லது வழமை நிலைக்கு கொண்டுவருவதற்குத் தேவையென உரியவாறு தீர்மானிக் கப்படும் ஓர் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை அவருக்கு உண்டு.

(3) சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அல்லது அவரது அதிகாரம்பெற்ற முகவருக்கு வளாகத்தைப் பரீட்சிக்கும் பொருட்டு சுகாதார பராமரிப்புச் சேவைகளை வழங்குவதற்காக பயன்படுத்தப்படும் எந்தவொரு வளாகத்திற்கும் நுழைவதற்கு அல்லது இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவில் குறிப்பிட்டுக் காட்டப் பட்டுள்ள சட்டரீதியான தொழில் ஒன்றுக்காக ஆட்களை தனிமைப் படுத்துவதற்கு அனுமதி வழங்கப்படும்.

(4) இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் காட்டப்பட்டுள்ள தொற்றுநோயினால் அத்தகைய நபர் ஒருவருக்கு நோய்த் தொற்று ஏற்படக்கூடுமென சட்டத்தின் (3) ஆம் உப பிரிவின்மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை ஒன்றின் பிரகாரம் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் நியாயமானதொரு தீர்மானத்தை வழங்கு வாராயின் மருத்துவப் பரிசோதனை ஒன்றுக்கு அதன் பின்னர் தனிமைப்படுத்தலுக்கு எந்தவொரு நபரும் முன்னிலையாதல் வேண்டும்.

துறைமுகம் மற்றும் போக்குவரத்து

**12.** (1) வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளையின் பிரகாரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் எழுத்துமூல அறிவுறுத்தலுக்க அமைய அமைச்சருக்கு பின்வரும் பணிகளை மேற்கொள்ள முடியும்:-

(அ) துறைமுகம், விமான நிலையம் மற்றும் ஏனைய நுழைவு இடங்கள் ஊடாக 14 நாட்களுக்கு மேற்படாத கால எல்லைக்காக நபர்கள் பிரயாணம் மேற்கொள்ளல் அல்லது போக்குவரத்து செய்தலைத் தடைசெய்தல் அல்லது வரையறுத்தல், எவ்வாறாயினும், பண்டப் போக்குவரத்து அல்லது அத்தகைய பண்டங்களை நகர்த்தும் அல்லது போக்குவரத்து செய்யும் தொழில் முயற்சி அல்லது தொழிலில் ஈடுபட்டுள்ள எந்தவொரு நபருக்கும் அத்தகையதொரு தடை அல்லது வரையறை ஏற்புடைய தாகாது;

(ஆ) நிலையப் பொறுப்பதிகாரிகள், விமானிகள், புகையிரத முகாமையாளர்கள் மற்றும் ஏனைய நபர்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் ஏனைய நுழைவு இடங்களின் உரிமையாளர்கள் மற்றும் முகாமையாளர்கள்மீது கடமைகளை விதித்தல்.

(இ) துறைமுகம், விமான நிலையம் மற்றும் ஏனைய நுழைவு இடங்களில் உள்ள நபர்களுக்கு சுகாதாரம் தொடர்பான விபரங்கள் அல்லது வினாக்கள் உள்ளிட்ட தகவல்களை வழங்குதல் அல்லது பதில் வழங்குதல் அவசியம் ஆகும்.

(2) (1) ஆம் உப பிரிவின்கீழ் வழங்கப்படும் எந்தவொரு கட்டளையும் உடனடியாக பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறான பிரேரணை ஒன்றின்மூலம் அத்தகைய கட்டளையினை நீக்குவதற்கும் முடியும்.

(3) பிரேரணை மூலம் பாராளுமன்றத்திற்கு (1) ஆம் உபபிரிவின்கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளை ஒன்றை மேலும் 14 தினங்களுக்கு மேற்படாத ஒருகாலத்திற்கு நீடிக்க முடியும் என்பதுடன்

அதற்குச் சமமான பிரேரணைகளின் பின்னர் அத்தகைய கட்டளையினை 14 தினங்களுக்கு மேற்படாத காலத்திற்கு நீடிக்க முடியும்.

தனிமைப் படுத்தல் முதலியன

**13.** (1) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணை ஒன்றில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள நோய் பரவுவதனைத் தடுக்கும் ஒரேயொரு நோக்கத்திற்காக பெயர் குறிப்பிடப்பட்ட எந்தவொரு நபருக்கும் நியாயமானதாக தேவைப் படக்கூடிய:-

(அ) பொருத்தமான நிறுவனம் ஒன்றில் நபர் ஒருவரை அல்லது ஏனைய ஒன்றை தனிமைப்படுத்தி வைத்தல் அல்லது தனிமைப்படுத்தல்;

(ஆ) நபர் ஒருவரை மருத்துவப் பரிசோதனைக்கு முன்னிலைப்படுத்தல்;

(இ) நபர் ஒருவரை வைத்தியசாலையில் அல்லது ஏனைய பொருத்தமானதொரு நிறுவனத்திற்கு அனுப்புதல்;

(ஈ) நபர் ஒருவரை வைத்தியசாலையில் அல்லது ஏனைய பொருத்தமானதொரு நிறுவனத்தில் தடுத்து வைத்தல்;

(உ) நபர் ஒருவரை, ஏனைய ஒன்றை அல்லது வளாகம் ஒன்றை கிருமித் தொற்று நீக்கம் செய்தல் அல்லது தூய்மை இன்மையினை அகற்றுதல்;

(ஊ) நபர் ஒருவர் பாதுகாப்பான உடை அணிதல்;

(எ) நபர் ஒருவரின் சுகாதாரம் அல்லது ஏனைய நிலைமைகள் தொடர்பான தகவல்களை வழங்குதல் அல்லது வினாக்களுக்கு விடையளித்தல்;

(ஏ) நபர் ஒருவரின் சுகாதார நிலைமையை மேற்பார்வை செய்தல் மற்றும் விளைவுகளை அறிக்கையிடல்;

(ஐ) ஏனையவர்களுக்கு தொற்றுவதற்கான அல்லது பரவுவதற்கான அவதானத்தைக் குறைத்துக்கொள்ளக்கூடிய விதம்பற்றி நபர் ஒருவரை பயிற்சி அல்லது அறிவுறுத்தல் செயலமர்வுகளில் பங்குபற்றச் செய்தல்;

(ஒ) நபர் ஒருவர் எவ்வாறான இடத்தினை நோக்கி நடமாடுகின்றார் என்பது பற்றியும் அத்தகைய நபருடன் தொடர்புகளைப் பேணுகின்ற நபர்கள் பற்றியும் வரையறைகளை விதித்தல்;

(ஓ) நபர் ஒருவர் தொழில் அல்லது வியாபாரத்தில் இருந்து விலகி இருத்தல்;

(ஔ) ஏதாவது ஒன்றைக் கைப்பற்றுதல் அல்லது தடுத்து வைத்தல்;

(க) பிரேதம் ஒன்று தொடர்பில் அத்தகைய பிரேதத்தை அடக்கம் செய்தல் அல்லது தகனம் செய்தல்;

(ங) ஏனைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏதேனும் ஒரு பொருளை இல்லாதொழித்தல் அல்லது அகற்றுதல்;

(ச) அத்தகைய வளாகத்தை மூடிவிடுதல்;

(ஞ) ஊர்தி அல்லது அசையும் கட்டமைப்பு ஒன்று தொடர்பில் அத்தகைய ஊர்தி அல்லது கட்டமைப்பைத் தடுத்து வைத்தல்;

(ட) கட்டடம், ஊர்தி அல்லது கட்டமைப்பு ஒன்று தொடர்பில் அதனது வளாகம் உடைத்து அழிக்கப்படல்.

(2) நியாமான காரணம் இன்றி (1) ஆம் உப பிரிவின்கீழான ஒரு கட்டளையினைப் பின்பற்றுவதற்கு தவறும் குற்றம் ஒன்றைப் புரியும் ஒவ்வொரு நபரும் நீதிவான் ஒருவர் முன்னிலையில் விசாரிக்கப்படும் சுருக்கமுறை வழக்கு விசாரணையினைத் தொடர்ந்து குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் ரூபா பத்தாயிரத்திற்கு மேற்படாத ஓர் அபராதம் செலுத்தப்படுவதற்கு ஆளவார்.

(3) வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளைமூலம் அமைச்சருக்கு ஆட்கள் அல்லது ஏனையவற்றை தனிமைப் படுத்துவதற்காக பயன்படுத்தப்படவேண்டிய பொருத்தமான நிறுவனங்களுடன் இணங்கவேண்டிய ஆகக்குறைந்த தரங்களை நிர்ணயிக்க முடியும்.

**14.** (1) இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் தாபிக்கப் பட்டுள்ள சபையின் அறிவுறுத்தலுக்கு அமைய மற்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளையின் பிரகாரம் சமூக நலன்புரி நடவடிக்கைக்கு பொறுப்பான அமைச்சர், அவசரகால பொதுச் சுகாதார நிலைமை ஒன்றின்போது ஆதரவற்ற நிலைமை காரணமாக சட்டத்தின் 10 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள இயலாத நபர்கள் அத்தகைய பண்டங்கள் சேவைகளை இலவசமாக அல்லது பெயரளவிலான கிரயத்தில் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதனை உறுதிசெய்தல் வேண்டும். விசேட உதவி

(2) (1) ஆம் உபபிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அனைத்து ஏற்பாடுகள் தொடர்பான ஓர் அறிக்கை வாராந்தம் அமைச்சரினால் சபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**15.** (1) வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளை மூலம் அமைச்சருக்கு எந்தவொரு கல்வி வளாகத்தினையும் தற்காலிகமாக முடிவிட முடியும் என்பதுடன் அத்தகைய கட்டளையை அவசரகால பொதுச் சுகாதார கால எல்லைக்கு அப்பால் கொண்டு செல்லத் தேவையில்லை எனின் அவசரகால பொதுச் சுகாதார நிலைமை, அத்தகைய கட்டளையில் காட்டப்பட்டுள்ள ஒரு கால எல்லைக்கு செல்லுபடியாகும். கல்வி வளாகங்கள்

(2) ஏதேனும் கல்வி வளாகம் ஒன்றின் முகாமைத்துவம் அல்லது நிர்வாகம் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய எந்தவொரு நபரும் (1) ஆம் உபபிரிவின்கீழ் பிறப்பிக்கப்பட்ட கட்டளை ஒன்றுக்கு ஏற்ப செயற்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறான கட்டளையில் காட்டப்பட்டுள்ள கால எல்லைக்காக நபர்கள் அத்தகைய வளாகங்களுக்கு வருகை தராதிருப்பதனை உறுதி செய்வதற்குரிய நியாயமான நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்..

(3) வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள கட்டளை மூலம் அமைச்சருக்கு அத்தகைய கட்டளை ஒன்றில் குறிப்பிட்டுக்காட்டப் பட்டுள்ள கால எல்லைக்குள் சமகால அல்லது அதற்கு அண்மித்த செவிப்புல மற்றும் கட்புல தொடர்பு மூலம் மாணவர்களுக்கு கல்வி கற்பித்தல் நடவடிக்கைகளை பாடசாலை வளாகத்தினுள் மேற்கொள்வதுடன் தொடர்பாக எந்தவொரு பாடசாலைக்கும் முற்படுத்த முடியும் என்பதுடன் அக்கால எல்லையானது அவசர கால பொதுச் சுகாதார கால எல்லைக்கு அப்பால் நீடிக்கப்படக் கூடாது.

(4) (3) ஆம் உப பிரிவின்கீழ் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள எந்தவொரு பாடசாலைக்கும் அக்கட்டளைக்கு அமைய செயற்படுத்து வதற்குத் தேவையான தொழில்நுட்ப, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிதிசார் வளங்கள் வழங்கப்படல் வேண்டும்.

ஊழியம்

**16.** அவசரகால பொதுச் சுகாதார கால எல்லைக்குள் பாரியளவு எண்ணிக்கையான ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட கைத்தொழில்கள் அல்லது பாதுகாக்கப்பட்ட துறைகளில் தொழில் புரியும் நபர்களை அத்தகைய தொழில்களில் தொடர்ந்தும் வைத்திருப்பதனை உறுதிசெய்வதற்காக மாத்திரம் விசேட நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் "பாதுகாக்கப்பட்ட கைத்தொழில்கள்" அல்லது "பாதுகாக்கப்பட்ட துறைகள்" என பாராளுமன்றப் பிரேரணை ஒன்றின் மூலம் பிரகடனப்படுத்த முடியும்.

வெளியீட்டு கட்டளைகளை வெளிப்படுத்தல்

**17.** இச்சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்படும் எந்தவொரு கட்டளையும் பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையதளம் மற்றும் அரசாங்க அச்சுத் திணைக்களம் ஊடாக பொதுமக்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

நோயாளி ஒருவரின் அடையாளத்தை வெளிப்படுத்தல்

**18.** இச்சட்டத்தின்கீழ் 5 ஆம் பிரிவின்கீழ் குறிப்பிட்டுக் காட்டப் பட்டுள்ள தொற்றுநோய் ஒன்றின் மூலம் பீடிக்கப்பட்டுள்ள நபர் ஒருவரின் அடையாளத்தை தீய எண்ணத்துடன் வெளியிடும் எந்தவொரு நபரும் குற்றம் ஒன்றுக்குரிய குற்றவாளியாக கருதப்பட வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னிலையில் இடம்பெறும் சுருக்கமுறை வழக்கு விசாரணை ஒன்றைத் தொடர்ந்து குற்றவாளியாக்கப்பட்ட பின்னர் ரூபா ஐம்பதாயிரத்திற்கு மேற்படாத அபராதத்திற்கு ஆளாதல் வேண்டும்.

வேறு ஏதேனும் சட்டங்களை விட இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மோலோங்கி நிற்றல்

**19**. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்கும் என்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஏனைய எழுதப்பட்ட சட்டம் ஆகியவற்றுக்கு இடையில் ஏதேனும் பொருந்தாமை ஏற்படும் பட்சத்தில் அதன் பிரகாரம் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்கும்.

பொருள் கோடல்

**20**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப் படுத்தினாலன்றி–

“பெயர் குறிப்பிடப்பட்ட நபர்” என்பது சட்டத்தை நடைமுறைப் படுத்தும் எந்தவொரு அலுவலர் அல்லது இச்சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட எந்தவொரு கட்டளையினால் விதிக்கப்பட்ட ஏனைய நபர் ஒருவர் எனப் பொருள்படும்.

“கல்வி வளாகம்” என்பது-

(அ) 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, கல்விக் கட்டளைச் சட்டத்தின்கீழ் உள்ள அரசாங்க பாடசாலை, துணைப் பாடசாலை அல்லது உதவி பெறப்படாத பாடசாலை;

(ஆ) 1966 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உயர்கல்விச் சட்டத்தின்கீழ் உள்ள மேற்படிப்புத் துறையில் உள்ள ஒரு நிறுவனம்;

(இ) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்விச் சட்டத்தின்கீழ் கல்வி அல்லது பயிற்சி வழங்குநர்,

எனப்பொருள்படும்.

“பொருத்தமான நிறுவனம்” என்பது இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள தொற்றுநோய் ஒன்றை இனம் காணல் அல்லது அவற்றை உள்ளடக்கு

வதற்காக நேரடியாக ஏற்புடைய எந்தவொரு நடவடிக்கை தொடர்பிலும் நபர்களுக்கு சுகாதார சேவைகளை வழங்கு வதற்கு நியாயமானவாறு மீள்நிர்மாணிக்க முடியுமான எந்தவொரு வளவும் எனப் பொருள்படும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**21**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.